# ஒத்துப் போவதற்கு உங்களால் முடியாதபோது (15:35-41)

அப். 15ன் முடிவுப் பகுதியானது அதிர்ச்சியூட்டக் கூடியதாக இருக்கின்றது. அந்த அதிகாரம் முழுவதிலும் பவுலும் பர்னபாவும் சபையில் நிலவியிருந்த மாறுபாடுகளைத் தீர்த்து வைக்கச் சுயநலமில்லாமல் பிரயாசப்பட்டார்கள், அதனால் சபையில் பிரிவினை ஏற்பட்டு விடாதபடிக்குப் பாதுகாக்க மிகவும் உழைத்தார்கள். பிறகு முடிவு வசனங்களில் பவுலும் பர்னபாவும் - தங்கள் சொந்த மாறுபாடுகளைத் தீர்க்க முடியாமல் - பிரிந்து சென்றார்கள்!

நான் லூக்காவாயிருந்திருந்தால், பவுலுக்கும் பர்னபாவுக் கும் ஏற்பட்ட இந்த "கடுமையான கருத்து வேறுபாடு" என்ற உண்மையைக் கூறாமல் விட்டுவிடும்படி சோதிக்கப்பட்டிருப் பேன். சபைகளை மறுபடியும் காண அவர்கள் முடிவு செய்தபோது, ஒன்றிற்குப் பதில் இரண்டு ஊழியக் குழுக்களா கச் சென்றால் இரு மடங்கு வேலை செய்ய முடியும் என்று அவர்கள் தீர்மானித்ததாக நான் கூறியிருந்திருப்பேன் - அதைத்தான் அவர்கள் செய்தார்கள். லூக்கா அவ்விதமான சோதனைக்கு ஆட்படவில்லை. வழக்கமாகவே, வேதாகமப் பாத்திரங்கள் - வேதாகமக் கதாநாயகர்கள் கூட - அவர்கள் எப்படியிருந்தார்களோ அப்படியே சித்திரிக்கப்பட்டார்கள், அவர்கள் எப்படியிருக்க வேண்டுமோ அப்படிச் சித்தரிக்கப்பட வில்லை.

பவுல் மற்றும் பர்னபா ஆகியோரிடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டை லூக்கா ஏன் பதிவு செய்தார்? நிச்சயமாய் இது அவர்களில் ஒருவரை சங்கடப்படுத்துவதற்காக இல்லை,[1] ஆனால் இந்த நிகழ்ச்சியிலிருந்து, கருத்து வேறுபாட்டைத் தீர்த்துக் கொள்வது எப்படி என்பதைச் சகோதரர்கள் கற்றுக் கொள்வதற்காகவே இதை அவர் பதிவு செய்தார். இதற்கு முந்திய இரண்டு கட்டுரைகளிலும் நாம், சபையின் முரண்பாடு

*களைத் தீர்ப்பது எப்படி என்று விவாதித்தோம். ஆயினும் சில சமயங்களில் எழுகின்ற பிரச்சனைகளை நம்மால் தீர்த்து வைக்க முடியாமல் இருப்பதாக காணுகின்றோம். அப்பொழுது நாம் செய்ய வேண்டியதென்ன? நமது வேதபாடப் பகுதியில் சில பதில்கள் தரப்பட்டுள்ளன.*

## அனல் பறக்கும் ஒரு விவாதம்

***ஒரு ஆலோசனை கூறப்படுகின்றது (15:35, 36)***

*நடந்த நிகழ்ச்சியை நமது சிந்தையில் கொண்டு நாம் தொடங்குவோம். நமது முந்திய பாடமானது அப். 15:35ல் முடிந்தது: ‘‘பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவிலே சஞ்சரித்து, வேறே அநேகரோடுங் கூடக் கர்த்தருடைய வசனத்தை உபதேசித்துப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார்கள்.” எருசலேம் கூட்டத்திற்குப் பிறகு அவர்கள் எத்தனை நாட்கள் அந்தியோகியாவில் தங்கியிருந்தார்கள் என்று நாம் அறியவில்லை. அந்தக் காலத்தில் பவுல் கலாத்தியாவின் கிறிஸ்தவர்களுக்கு தமது நிருபத்தை எழுதியிருக்க வாய்ப் புண்டு. கலாத்தியர் 2:11-16ன் நிகழ்ச்சியானது - பேதுரு, புறஜாதியாரான சகோதரருடன்சாப்பிடாமல் விலகிப் பிரிந்தது பற்றிப் பவுல் கண்டனம் பண்ணியது - இக்காலகட்டத்தில் நடந்திருக்கச் சாத்தியக் கூறு உள்ளது. அப்படி நடந்திருந்தால், கலாத்தியர் 2ல் உள்ள “மற்ற யூதரும் அவனுடனே கூட மாயம் பண்ணினார்கள்; அவர்களுடைய மாயத்தினாலே பர்னபாவும் இழுப்புண்டான்” (கலா. 2:13) என்ற சொற்றொடரானது நமது பாடத்தில் குறிப்பிடத்தக்க சிறப்புள்ளதாகின்றது. பர்னபாவின் நடக்கையைப் பார்த்துப் பவுல் ஏமாற்றம் அடைந்திருக்க வேண்டும் - ஆழமாய்ப் புண்பட்டிருக்க வேண்டும். அப்படி யானால், அப். 15:36-39 பகுதியின் நிகழ்ச்சிகளுக்கு முன்ன தாகவே, பவுல் மற்றும் பர்னபாவின் நட்புறவில் கறைபட்டி ருக்கப் பலமான சாத்தியக்கூறு உள்ளதை நாம் காணுகின்றோம்.*

*அவ்விரு மனிதர்களும் அந்தியோகியாவில் சற்றுக் காலம் ஊழியம் செய்த பிறகு, பவுல் மறுபடியும் சாலையில் செல்ல சமயமாயிற்று என்று முடிவு செய்தார். நாம், “சில நாளைக்குப் பின்பு பவுல் பர்னபாவை நோக்கி: நாம் கர்த்தருடைய*

வசனத்தை அறிவித்திருக்கிற சகல பட்டணங்களிலுமுள்ள சகோதரர்கள் எப்படியிருக்கிறார்களென்று போய்ப் பார்ப்போம் வாரும் என்றான்" (15:36) என்று வாசிக்கின்றோம். நாம் மக்களை ஞானஸ்நானப்படுத்தி விட்டுப் பிறகு அவர்களைக் கண்டு கொள்ளாமல் இருந்து விட முடியாது: "புதிய கிறிஸ்தவர்களைப் பேணி வளர்க்க நாம் ஆயத்தமாகாத வரையிலும், இழந்து போகப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல நாம் தயாரானவர்களாய் இருப்பதில்லை என்று பிரதான கட்டளையானது நமக்கு அறிவிக்கின்றது."[2] முன் நாளைய ஊழியர்களில் பெரும்பாலோர், தாங்கள் ஞானஸ்நானம் கொடுத்திருந்த ஆத்துமாக்களைப் பேணி வளர்ப்பதற்காகத் தங்கள் ஊழியக் களத்திற்குக் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மறுபடியும் சென்றிருக்கின்றார்கள்.

ஏற்கனவே நிலைநாட்டப்பட்டிருந்த சபைகளைப் பெலப்படுத்துவது என்பதே பவுலின் திட்டமாக (குறைந்த பட்சம் திட்டமாக) இருந்தது. அந்தியோகியாவின் சபையில் உண்டான கலகம் எழுப்பிய யூதமத போதகர் பற்றிய அவரது கவலையை கலாத்தியருக்கு எழுதிய நிருபம் வெளிப்படுத் தியது. ஊக்கமூட்டும் ஒரு எளிய பயணமானது எவ்விதம் குறிப்பிடத் தக்க சாதனைமிக்க நற்செய்திப் பயணமாயிற்று என்று காணப் போகின்றோம்.

### சச்சரவு எழுப்பப் படுகின்றது (15:37-39அ)

பர்னபா பவுலின் ஆலோசனைக்கு உடன்பட்டார், ஆனா லும் தமது சுய ஆலோசனையொன்றக் கூட்டிக் கொண்டார்: "அப்பொழுது பர்னபா என்பவன் மாற்கு என்னும் பேர் கொண்ட யோவானைக் கூட அழைத்துக் கொண்டு போக வேண்டும் என்றான்" (வ. 37). பவுல் மற்றும் பர்னபாவுடன் முதல் பயணத்தைத் துவக்கியிருந்த இந்த யோவான் மாற்கு, பர்னபாவின் இனத்தாராயிருந்தார், மேலும் பம்பிலியாவின் பெர்கேயில் (13:13) அவர் பயணத்திலிருந்து திரும்பி விட்டார் என்பதையும் நீங்கள் நினைவுகூரக் கூடும்.

இரண்டாவது பயணத்தில் மாற்குவைக் கூட்டிக் கொண்டு போகும்படியான விருப்பத்தைப் பர்னபாவிடம் தூண்டியது எது? ஒருவேளை மாற்கு பர்னபாவிடம் மன்னிப்புக் கேட்டு வந்திருக்கலாம்: "நான் இடையிலேயே திரும்பி வந்ததற்கு

*வருந்துகின்றேன். அது தவறானது என்று நான் அறிகின்றேன், ஆனால் இரண்டாவது வாய்ப்புப் பெறுவதற்கு நான் விரும்புகின்றேன். இந்த முறை உங்களை விட்டு வரமாட்டேன் என்று வாக்களிக்கிறேன்'' என்று அவர் கூறியிருக்கலாம். காரணம் எதுவாயிருந்த போதிலும், மாற்குவுக்கு இரண்டாவது வாய்ப்பளிக்க ஆறுதலின் மகன் மகிழ்வுடன் ஒப்புக் கொண்டார்.*

*பவுல் மகிழ்வடையவில்லை. மறுபடியும் மாற்குவை அழைத்துச் செல்லுமளவுக்கு மாற்கு பக்குவமடைந்திருந்தாரென்று பவுல் நம்பி ஏற்கவில்லை. ஆகையால், "பவுலோ: அவன் பம்பிலியா நாட்டிலே நம்மை விட்டுப் பிரிந்து நம்மோடே கூட ஊழியத்துக்கு வராததினாலே, அவனை அழைத்துக் கொண்டு போகக் கூடாது என்றான்" (வ. 38). ஆங்கிலத்தில் இவ்வசனத்தில் உள்ள* "kept insisting" *என்ற சொற்றொடரானது இது தொடர்ந்து நடைபெற்ற செயலாயிருந்தது என்று சுட்டிக் காட்டுகின்றது. மாற்குவை அழைத்துச் செல்ல வேண்டும் என்று பர்னபா தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கையில், அவர்கள் அப்படிச் செய்யக்கூடாதென்று பவுல் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருந்தார். அவர்களுக்குள் நடந்த கருத்துப் பரிமாற்றம் நமக்குத் தரப்படவில்லை, ஆனாலும் கற்பனை செய்வதற்கு அது ஒன்றும் கடினமானதல்ல:*[3]

*பர்னபா: ''நாம் மாற்குவுக்கு இன்னொரு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று நான் நினைக்கின்றேன்.''*

*பவுல்: "இல்லை, 'கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல'* [*லூக். 9:62*] *என்று கர்த்தர் கூறினார்.''*

*பர்னபா: "மேலும் அவர், 'இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்'* [*மத். 5:7*] *என்றும் கூறினாரே.''*

*பவுல்: ''இந்தப் பயணம் சுலபமானதாயிராது, நாம் நம்முடன் செல்பவர்கள் ஒவ்வொருவரையும் சார்ந்திருக்க வேண்டும். ஞானவானான மனிதர், 'ஆபத்துக் காலத்தில் துரோகியை நம்புவது உடைந்த பல்லுக்கும் மொழி புரண்ட காலுக்கும் சமானம்'* [*நீதி. 25:19*] *என்று கூறியுள்ளாரே.''*

*பர்னபா: "நீங்கள் இதற்கு வேதவசனத்தைப் பயன்படுத்துவதாயிருந்தால் தாவீது யோனா இன்னும் மற்றவர்களின்*

வரலாறுகளை மறந்து விடவேண்டாம். தேவன் மனிதர்களுக்கு இரண்டாவது வாய்ப்பைத் தரச் சித்தமுள்ளவராயிருக்கும் போது, நாம் ஏன் தரக் கூடாது?"

பவுல்: "மாற்கு மட்டும் உங்கள் இனத்தாராயில்லாதிருந் தால் நீங்கள் அவருக்காக இப்படிப் பரிந்து பேச மாட்டீர்கள்."

பர்னபா: "நீங்கள் என் இனத்தாரில்லையே, ஆனாலும் நான் உங்களுக்காக எருசலேமில் பரிந்து பேசினேனே-ஞாபக மிருக்கிறதா?" (அப். நட. 9:26, 27).

வசனம் 39ல் "இதைப் பற்றி அவர்களுக்குள்ளே கடுங்கோப மூண்டபடியினால் ...' ' என்று கூறப்படுகிந்றது. RSV யில் இது "ஒரு தீவிரமான சச்சரவு" (a sharp contention) என்று அழைக்கப் படுகின்றது. J.B. Phillipsன் மொழிபெயர்ப்பில் இது "ஒரு தீவிர மான கருத்து மோதல்" என்றும், J.B. Rotherham மொழிபெயர்ப் பில் இது "ஒரு கோப உணர்வு" என்றும் குறிப்பிடப்படுகின்றது. ஆங்கிலம் மற்றும் கிரேக்கம் ஆகிய மொழிகளில் பயன் பட்டுள்ள வார்த்தைகள் சூடான விவாதம் - ஒருவேளை பொறுமை இழத்தல் மற்றும் உயர்ந்த குரல்களில் வெட்டிப் பேசுதல்- நடந்ததாகக் கூறுகின்றன. பவுல் பின்னாளில், "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. சினமடையாது" (1 கொரி. 13:4, 5) என்று எழுதினார். இவ்வாறு எழுதுகையில் பவுல் சில ஆண்டு களுக்கு முன்பு தமது நண்பரான பர்னபாவுடன் தாம் மேற் கொண்ட தீவிரமான விவாதம் பற்றி எண்ணி, சற்று நாண மடைந்திருக்கலாம். இந்த நிகழ்ச்சியில் பவுல் கோபமூட்டப் பட்டார் என்பதில் சந்தேகமில்லை!

### தீர்வு ஒன்று முயற்சிக்கப்படுகின்றது (15:39ஆ-41)

சற்று நேரத்திற்குப் பிறகு, பவுலும், பர்னபாவும் - குறைந்தது அந்த நேரத்தில் - தங்கள் கருத்து மாறுபாடுகளைத் தீர்த்துக் கொள்ள முடியாதென்பது தெளிவாயிற்று. நிலைநாட்டப் பட்டிருந்த சபைகளைச் சென்று பார்க்கும் தங்களின் பணிப் பொறுப்புக்களைப் பிரித்துக் கொள்ள அவர்கள் முடிவு செய்தார்கள்; பர்னபா சீப்புரு தீவைச் சேர்ந்தவராதலால் (4:36), அங்கு நடந்த ஊழியத்தைப் பின் தொடரும் பணிகளை அவர் ஏற்றுக் கொண்டார், பவுல் ஆசியா மைனர் பகுதிகளுக்குச் செல்லத் தீர்மானித்தார். வசனம் 39ஆ, "அவர்கள் ஒருவரை யொருவர் விட்டுப் பிரிந்தார்கள். பர்னபா மாற்குவைக்

கூட்டிக் கொண்டு கப்பல் ஏறி சீப்புரு தீவுக்குப் போனான்" என்று கூறுகின்றது. அப். நடபடிகள் புத்தகத்தில் இவ்விடத்தில் தான் நாம் பர்னபாவைப் பற்றிக் கடைசியாகப் படிக்கின் றோம். நம்மைப் போலவே, பர்னபாவிடத்திலும் முழுமையற்ற விஷயங்கள் இருந்தன, ஆனால் அவையெல்லாவற்றிலும், அவர் எவ்வளவு அற்புதமான ஒரு கிறிஸ்தவராயிருந்தார்! சபையில் ஆறுதலின் மகன்கள் அதிகமாய்த் தேவைப்படுகின்றார்கள்!

பர்னபாவும் பவுலும் பிரிகையில், பவுலுக்கு இங்கு முக்கியத்துவம் தரப்படுகின்றது: "பவுலோ சீலாவைத் தெரிந்து கொண்டு, சகோதரராலே தேவனுடைய கிருபைக்கு ஒப்பு விக்கப்பட்டு, புறப்பட்டு, சீரியாவிலும் சிலிசியாவிலும் திரிந்து, சபைகளைத் திடப்படுத்தினான்" (வ. 40, 41).

## ஒரு சில தீர்மானங்கள்

இவ்விடத்தில் சற்று நின்று, பவுலும் பர்னபாவும் என்ன செய்திருக்க முடியும் மற்றும் என்ன செய்திருக்க வேண்டும் என்று யூகிக்கும்படி நம்மை தூண்டச் செய்கின்றது. முந்திய நமது இரண்டு பாடங்களில் கொடுக்கப்பட்ட ஆலோசனை களை அவர்கள் பின்பற்றியிருந்தால் தங்களுக்குள் ஏற்பட்ட கருத்து மாறுபாடுகளைத் தீர்த்துக் கொண்டிருக்கலாமே என்று எண்ணாமலிருப்பது கடினமாகும். ஆயினும், என்ன நடந்தது என்பதைப் பற்றி லூக்கா ஒரு சுருக்கத் தொகுப்பைக் குறித்துக் கொடுத்து, நாம் நியாயாதிபதியாகவும், பஞ்சாயத்துக் குழுவினராகவும் செயல்படப் போதுமான தகவல்களை நமக்குத் தரவில்லை. ஆகவே, சகோதரர்களுக்குள் உண்டாகும் கருத்து மாறுபாடுகள் பற்றிய பல அடிப்படை உண்மைகளை நான் இந்த வரலாற்றிலிருந்து எடுத்துரைக்கின்றேன்:

(1) சகோதரர்கள் எப்பொழுதுமே கருத்து மாறுபாடு கொண்டுள்ளனர் - நல்ல சகோதரர்களும் கூட சில வேளை களில் கருத்து மாறுபாடு கொள்கின்றனர். பவுலும் பர்னபாவும் நல்ல மனிதர்களாயிருந்தும்கூட கருத்து மாறுபாடு கொண்டி ருந்தார்கள். "இரண்டு மனிதர்கள் எப்பொழுதுமே கருத்தொரு மித்து இருந்தால் அவர்களில் ஒருவர் தேவையில்லை" என்று யாரோ ஒருவர் கூறினார். கருத்து மாறுபாடு என்பது நமது சுயகட்டுப்பாட்டை இழக்கச் செய்யாத வரைக்கும், கருத்து

மாறுபாடு கொள்வதில் தவறில்லை. (பவுலுக்கும் பர்னபாவுக்கும் இடையில் நடைபெற்ற "ஒரு *தீவிரமான* கருத்து மாறுபாட்டை" நாம் புகழ முடியாது) மற்றும் நம்மால் முடிவு செய்யப்பட வேண்டிய விஷயங்களில்[4] கருத்து மாறுபாடு கொள்வது தவறில்லை.

(2) அநேக கருத்து மாறுபாடுகளில் இரு சாராருமே ஒரு பகுதி சரியானவர்களாகவும், ஒரு பகுதி தவறானவர்களாகவும் இருக்கின்றார்கள். பவுல் மற்றும் பர்னபாவின் கருத்து மாறுபாட்டைப் பற்றி நாம் படிக்கையில், "யார் சரியானவர்? யார் தவறானவர்?" என்ற கேள்வியை நாம் தவறாமல் கேட்கின்றோம். ஒரு நபர், "பவுல் சரியானவர் என்று நான் நினைக்கின்றேன். அவர் இருந்த நிலையில் நான் இருந்துள்ளேன் - முறிந்து போன வைக்கோல்மேல் நீங்கள் சாய்ந்திருக்க முடியாது என்று நான் உங்களுக்குக் கூறுகின்றேன்" என்று சொல்லுகின்றார். அதற்கு இன்னொருவர், "இல்லை, பர்னபாவே சரியானவர் - ஏனென்றால் மாற்கு கர்த்தருக்கென்று மாபெறும் ஒரு ஊழியக்காரர் ஆனாரே!" என்று பதில் சொல்கின்றார். யார் சரியானவர் மற்றும் யார் தவறானவர் என்று லூக்கா கூறுவதில்லை. அந்தியோகியாவிலிருந்த சகோதரர்கள் பவுலுக்கும் சீலாவுக்கும் முறையான விடையனுப்புதல் கொடுத்தார்கள் என்ற உண்மையானது (வ. 40) அவர்கள் பவுலின் பக்கம் இருந்தார்கள் என்ற கருத்தை மறைமுகமாக உணர்த்தலாம் (குறைந்த பட்சம் அவரது நிலைபாட்டை அவர்கள் கண்டனம் செய்திருக்கவில்லை), ஆனாலும் இது தீர்மானிக்கப்படாததாகவே இருக்கின்றது.

கருத்து மாறுபாடு தங்களின் சுயகட்டுப்பாட்டை இழக்கச் செய்ததை அனுமதித்ததில் இருவருமே தவறானவர்களாயிருந்தார்கள். இன்னொரு விதத்தில் இருவருமே சரியானவர்களாய் இருந்தார்கள்; பவுலும் பர்னபாவும் அந்த விஷயத்தை இரு மாறுபட்ட கண்ணோட்டங்களில் நோக்கிக் கொண்டிருந்தார்கள். யோவான் மாற்குவைக் கூட்டிச் செல்வதானது குழுவின் மற்ற உறுப்பினர்களை ஊக்கமிழக்கச் செய்து அதனால் ஊழியம் பாதிக்கப்படும் என்று பவுல் பயந்தார்.[5] பர்னபாவோ, மாற்குவைக் கூட்டிச் செல்லாமல் இருந்தால் அது அவரை (மாற்குவை) ஊக்கமிழக்கச் செய்து அதனால் அம்மனிதர் பாதிக்கப்படுவார் என்று பயந்தார். "பவுல்

மனிதர்களைப் பார்த்து, 'தேவனுடைய ஊழியத்திற்கு அவர்கள் என்ன செய்ய முடியும்?' என்று கேட்டார். பர்னபாவோ மனிதர்களைப் பார்த்தார், 'தேவனுடைய கிரியைகள் அவர்களுக்கு என்ன செய்ய முடியும்?' என்று கேட்டார்''[6] என்று வாரன் வயர்ஸ் விளக்கமளிக்கிறார். கர்த்தருடைய ஊழியத்தில் இவ்விரு கண்ணோட்டங்களுமே அவசியமானவைகளாகும்.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் பின்வருகின்ற சட்டக் கோட்பாடு எங்களுக்குண்டு: "இரண்டு பேர் கருத்து மாறுபடும் போது, இருவருமே சரியானவர்களாயிருக்க முடியாது. ஒருவர் சரியானவராகவும், ஒருவர் தவறானவராகவும் இருக்க முடியும் அல்லது இருவருமே தவறானவர்களாயிருக்க முடியும், ஆனால் இருவருமே சரியானவர்களாயிருக்க முடியாது.'' வேதாகமத்தின்படி, உபதேச விஷயங்களில் இக்கோட்பாடு உண்மையாயிருக்கலாம், ஆனால் கருத்துக்கள் பற்றிய விஷயங் களில் இது உண்மையாயிருப்பதில்லை. நமது சொந்த தீர்மானங்களில் மற்றவர்கள் கருத்து மாறுபடுகையில் அவர்களிடத்திலுள்ள சரியானவைகளை நாம் ஒப்புக் கொண்டால் - (நாம் அவைகள் இலேசானவைகள் என்று எண்ணினாலும்) மற்றவர்கள் சரியானவர்களாயிருக்க முடியும் என்பதை நாம் ஒப்புக் கொண்டால் - அது நமது (திருமண உறவுகளை) உறவு முறைகளை மிகப் பெரிய அளவுக்கு உயர்த்தி விடும்!

(3) சில வேளைகளில், பலவகைப்பட்ட விதங்களில் முயற்சியெடுத்தாலும் கூட கருத்தொற்றுமை ஏற்படுத்த நாம் செய்யும் முயற்சி யாவும் வீணாகி விடுகின்றன, சகோதரர்கள் ''கருத்து வேறுபாடு கொள்வதற்கு ஒப்புக் கொள்ள'' வேண்டியதாகி விடுகின்றது. இப்படியாகக் கூடாது என்று நாம் விரும்பினாலும், இப்படியாகின்றது. இப்படியாகின்ற போது, இது ஒன்றும் உலகின் மாபெரும் துன்பமுமல்ல, இதனால் நட்புறவு முடிந்து போவதுமில்லை - ஆனால் இது இரு சாராரும் தாங்கள் எப்படியிருக்க வேண்டுமோ அப்படியிருந்தால் மட்டுமே இவ்வாறாகும்.

(4) சகோதரர்கள் கருத்தொருமித்துப் போக முடியவில்லை யென்றாலும் கூட, அவர்கள் கிறிஸ்தவர்களாகவே செயல்பட வேண்டும். உறுதியான சித்தமுடைய சகோதரர்கள் தங்களின்

கருத்து மாறுபாடுகள் பற்றி விவாதிக்கும்போது, பவுல் எபேசியருக்கு எழுதிய பின்வரும் புத்திமதியைப் படிக்க வேண்டியது அவசியமாகும்:

> *நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ் செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னதாக உங்கள் எரிச்சல் தணியக் கடவது; கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்; பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள். சகல விதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக் கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து … (எபே. 4:26, 29, 31, 32).*

“ஏற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் நாம் கருத்து மாறுபட முடியும்” என்று யாரோ ஒருவர் கூறியிருக்கின்றார்.

கருத்து வேறுபட்டபோது பவுலும் பர்னபாவும் எப்படி நடந்து கொண்டார்கள்? முதலாவது, அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தை விட்டுவிடவில்லை. பெரும்பாலும், ஒரு சகோதரர் இன்னொரு சகோதரரினால் அல்லல் படுகையில் அதன் விளைவைக் கர்த்தரிடத்தில் காட்டுகின்றார். இரண்டாவது, அவர்கள் ஒருவர் மற்றவரின் மதிப்பை அழிக்க முயற்சி செய்யவில்லை. பர்னபாவின் நற்திறம் பற்றிக் கேள்வியெழுப்பி பவுல் கலாத்தியா நாட்டு சபைகளுக்குக் கடிதம் எழுதிய தாகவோ அல்லது, பவுலின் இரக்கக் குறைபாடு பற்றி பர்னபா *Cyprus Informer* என்ற பத்திரிகையில் ஒரு கட்டுரை வெளியிட்ட தாகவோ நாம் எந்த விதக் குறிப்பையும் காண்பதில்லை. மூன்றாவதாக அவர்கள் எவ்விதத்திலும் விரோதம் பாராட்ட வில்லை. அப்படி அவர்கள் செய்யாதபடியினால், காலமானது அவர்களின் காயத்தை அநேகமாக ஆற்றியிருக்கும். பின்னாளில் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில் பர்னபாவைப் பற்றிக் குறிப்பிட்டார் (1 கொரி. 9:6). இக்குறிப்பு அவர்களுக் குள் கடின உணர்வு எதுவும் நிலவியிருக்கவில்லை என்பதை மறைமுகமாய் உணர்த்துகின்றது; இது பின்னாளில் அவர்கள் மறுபடியும் ஒன்றுபட்டு ஊழியம் செய்தார்கள் என்று கூட சுட்டிக்காட்டுவதாய் இருக்கலாம்![7] நாம் ஒரு சகோதரருடன் கருத்து மாறுபடும்போது பவுல் மற்றும் பர்னபா ஆகியோரிட

மிருந்து கற்றுக் கொள்ள தேவன் நமக்கு உதவுவாராக!

(5) நாம் கிறிஸ்தவர்களாக நடந்து கொண்டால், தேவன் நமது குறைபாடுகளைக் களைந்தெறிந்து, கருத்து மாறுபாட்டில் இருந்து நன்மையைக் கொண்டு வருவார். பவுல் மற்றும் பர்னபாவின் கருத்து மாறுபாட்டின் உடனடியான விளைவாக, ஒன்றல்ல, இரண்டு ஊழியக் குழுக்கள் புறப்பட்டு வெளியில் சென்றன. ஊழியக்களத்தில் இரண்டு குழுக்களை அனுப்புவதற்காக இந்நிகழ்ச்சி முழுவதிலும் பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதல் இருந்தது என்று ஆலோசனை செய்வது தவறான எண்ணமாகும், ஆனால் தேவன் மகிழ்ச்சியின்மையைக் களைந்தெறிந்து அதிலிருந்து நன்மை விளையச் செய்தார் என்று கூறுவது வரைமுறைக்குட்பட்டதாகும் (ரோமர் 8:28). பவுல்/பர்னபாவின் கருத்து மாறுபாடு போன்றவைகள் ஊழியக் களத்தில் அநேக முறை நடந்தேறியதை நான் கண்டிருக்கின்றேன்: இரண்டு மனிதர்கள் ஒன்றுகூடி ஊழியம் செய்ய முடியாத போது, அவர்கள் தனித்தனிப் பகுதிகளில் ஊழியம் செய்ய வேண்டுமென்று ஒப்புக் கொள்ளுகின்றார்கள். அநேக வேளைகளில், இப்படிப்பட்ட பிரிவானது மனமொத்ததாக இருக்கின்றது, மற்றும் இதன் இறுதி விளைவாக, ஒன்றுக்குப் பதிலாக - ஒன்றுடன் ஒன்று முழு ஐக்கியமாக உள்ள - இரண்டு சபைகள் நிலைநாட்டப்படுகின்றன.

பவுலும் பர்னபாவும் தங்களின் கருத்து மாறுபாட்டின் மத்தியிலும் கூட தேவனுக்குத் தொடர்ந்து ஊழியம் செய்த படியினால், நேர்மறையான நீண்ட கால விளைவுகளும் ஏற்பட்டன. இருமனிதர்களும் தங்களுடைய பிரயாசங்களில் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அடுத்து வரும் சில பாடங்களில் நாம், பவுலின் இரண்டாம் நற்செய்திப் பயணம் பற்றிப் படிக்கப் போகின்றோம். பவுலுக்கும் அவருடன் ஊழியம் செய்த புதிய குழுவினருக்கும் முன்பாக உணர்வுக் கிளர்ச்சி மிக்க, கனி தரும் நாட்கள் காத்திருந்தன. அதே வேளையில், பர்னபாவின் முயற்சிகளானது மாற்குவைத் தாம் கர்த்தருடைய முழு வல்லமையான ஊழியக்காரர் என்பதை உணரச் செய்து, நம்ப இயலாத அளவு வெற்றிகளை அடையச் செய்தன. ஏவப்பட்டிராத பாரம்பரிய வரலாற்றின்படியாக, மாற்கு எகிப்திலுள்ள அலெக்சாந்திரியாவுக்குச் சென்று அங்கு ஊழியத்தை நிலைநாட்டினார். அது உண்மையோ அல்லவோ,

எப்படியிருந்தாலும், மாற்கு பின்னாளில் பேதுருவுடன் உடன் ஊழியராய் இருந்தார் என்று நாம் அறிகின்றோம் (1 பேது. 5:13) மற்றும் இவரே மாற்கு நற்செய்தியையும் எழுதினார் என்றும் நாம் அறிகின்றோம். முடிவாக, அவர் பவுலுடன் ஒப்புரவானார்: பவுல் ரோமாபுரியில் முதன்முறை சிறையில் இருக்கையில் மாற்குவும் அவருடன் இருந்தார். பவுல் இவரை "தேவனுடைய ராஜ்யத்திற்கென்று" தமது உடன் வேலையாள் என்று குறிப்பிட்டார், மற்றும் மாற்கு "ஆறுதலாக இருந்ததாகவும் நிரூபிக்கப்பட்டார்" (கொலோ. 4:10, 11; மற்றும் பிலேமோன் 24 ஐயும் காணவும்). ஆயினும் பவுலின் இரண்டாம் சிறையிருப்பின் போது, அவர் மரணமடைவதற்குச் சற்று காலம் முன்னதாக அவர் தீமோத்தேயுவுக்கு விடுத்த வேண்டுகோளில் மிக வெளியரங்கமாக உள்ள விஷயம் பின்வருமாறு: "லூக்கா மாத்திரம் என்னோடே இருக்கின்றான். மாற்குவை உன்னோடே கூட்டிக் கொண்டு வா; ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன்'' (2 தீமோ. 4:11). ஒரு காலத்தில் மாற்கு பயனற்றவர் என்று பவுல் எண்ணினார்; கடைசியில் அவர் பிரயோஜனமுள்ளவர் என்று பவுல் கண்டார். (முழுமையற்ற மனிதர்களையும் தேவன் பயன்படுத்த முடியுமென்பது ஆச்சரியமல்லவா?)

## முடிவுரை

இரு சகோதரிகளுக்குள் நீண்ட காலத்திற்கு முன்பு உண்டான அற்ப கருத்து வேறுபாடு (அது எதைப் பற்றியது என்று இருவருக்குமே நினைவில் இல்லை) பற்றி நான் ஒருமுறை வாசித்தேன். அவர்கள் இருவரும் ஒரே வீட்டில் வாழ்ந்தாலும் கூட, அநேக வருடங்களாக அவர்கள் இருவரும் ஒருவருடன் ஒருவர் பேசிக் கொள்ளாமலே இருந்தார்கள். அவர்கள் வீட்டை இரண்டாகப் பிரிப்பதற்கு அவர்கள் சுண்ணாம்புக் கட்டி கொண்டு கதவு தொடங்கி, குளிர்காயுமிடம் வரைப் பிரிவுக்கோடு போட்டுக் கொண்டார்கள். ஒரே சமையலறையில் அவர்கள் சமைத்து, ஒரே மேசையில் உணவுண்டு, ஒரே படுக்கையறையில் படுத்தார்கள். இரவு முழுவதும் ஒருவர் மூச்சு விடுவதை ஒருவரால் கேட்க முடிந்தது ஆனால் செய்தித் தொடர்பு அழிக்கப்பட்டிருந்தது.

*“இது எவ்வளவு கவலைக்குரியது” என்று நீங்கள் கூறலாம், ஆனால் உலகம் முழுவதிலும், குடும்பங்களும், சமுதாயங் களும், சபைகளும் கூட நடுவில் இது போன்ற கோடுகளை வரைந்து கொண்டுள்ளன. இல்லை, நான் கண்ணால் காணக் கூடிய கோடுகளைப் பற்றிப் பேசவில்லை, ஆனால் மனதில் வரையப்பட்ட பிரிவினைக் கோடுகளைப் பற்றியே பேசுகின் றேன். கடந்த காலத்தில் ஏற்பட்ட கருத்து மாறுபாடுகளின் விளைவாக மற்ற மக்களுடன் கலந்து பழகாமல் இருக்கும் மக்களைப் பற்றியே பேசுகின்றேன். நீங்கள் இந்தச் சூழ்நிலையில் இருப்பதாக உங்களுக்குக் காணப்பட்டால், நான் உங்களிடத்தில் வேண்டிக் கொள்கின்றேன்: அந்தப் பிரிவினைக் கோடுகளை அழிக்க உங்களால் இயன்ற எல்லாவற்றையும் செய்யுங்கள்! “கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்’’ (ரோமர் 12:18).*

*நம்மால் ஆன மட்டும் இப்பாடத்தை நமக்குச் சொந்த மாக்கிக் கொள்வோமாக: யாருடனேனும் நீங்கள் தீவிரமான கருத்து வேறுபாடு கொண்டிருக்கின்றீர்களா? நீங்கள் எவ்விதத்தில் செயல்படுகின்றீர்கள்? “அவர் அல்லது அவள் எப்படி செயல்படுகின்றார்(ள்)?” என்று நான் கேட்கவில்லை என்பதைக் கவனியுங்கள், ஆனால் ‘‘நீங்கள் எப்படிச் செயல்படுகின்றீர்கள்?’’ என்றுதான் கேட்டேன். தவறான புரிந்து கொள்ளுதலை நேராக்க உங்களால் என்ன செய்ய முடியும்? இந்த வேளையில் நீங்கள் ஒரு சகோதரருடன் கருத்து மாறுபாடு கொண்டிருந்தால், தயவு செய்து அவ்விஷயத்தைக் குறித்து ஜெபிக்க நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். தேவனிடத் தில் உங்கள் பாவங்களை அறிக்கையிடுங்கள், அப்பிரச்சனை யைக் கையாள ஞானத்தையும் தாழ்மையையும் உங்களுக்குத் தரும்படி அவரிடத்தில் கேளுங்கள், மற்றும் அந்த சகோதரரைப் பற்றிய உங்கள் நடக்கையை சீர்திருத்தும்படியும் தேவனிடத் தில் கெஞ்சுங்கள்![8]*

## பிரசங்கக் குறிப்புகள்

“பிரிவினைக் கோடுகளை அழியுங்கள்!” என்று இப்பாடத்திற்குத் தலைப்பிட நீங்கள் விரும்பலாம். உங்கள் முன்னுரையில், தங்கள் வீட்டின் நடுவில் பிரிவினைக் கோட்டை வரைந்து கொண்ட சகோதரிகளின் கதையுடன் தொடங்குங்கள். பாடத்தை இரண்டு பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளுங்கள்: (1) “பிரிவினைக் கோட்டை வரைதல்” (15:35-39அ) மற்றும் (2) ‘‘பிரிவினைக் கோட்டை அழித்தல்’’ (15:39ஆ-41). முதலாவது தலைப்பின் கீழ், நீங்கள் “ஒரு சில தீர்மானங்கள்” என்பதில் முதலாம் எண்ணிட்ட கூற்றைப் பயன்படுத்த முடியும். இரண்டாவது தலைப்பின் கீழ் அதே பகுதியில் உள்ள எஞ்சியிருக்கும் ஆலோசனைகளைப் பயன்படுத்த முடியும்.

---

குறிப்புகள்

[1]லூக்கா அப். நடபடிகளை எழுதியபோது பர்னபா உயிருடன் இருந்திருக்கக் கூடும், பவுல் நிச்சயமாய் வாழ்ந்து கொண்டிருந்தார். [2]இது இவ்விதழில் உள்ள “தேவன் தங்களைக்கொண்டு செய்தவைகள் எல்லாவற்றையும்” என்ற கட்டுரையில் இருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. [3]இந்தக் கருத்தானது ரிக் ஆட்ச்லீ அவர்களால் டெக்ஸாஸின் அபிலைனில் உள்ள தென்மலைகள் கிறிஸ்துவின் சபையில் 1986 மே 4ல் பிரசங்கிக்கப்பட்ட “சகோதரர்கள் மாற்குவை விட்டுச் சென்றபோது” என்ற பிரசங்கத்தில் ஒரு கற்பனை உரையாடலாகத் தரப்பட்டது. [4]அடிப்படையான உபதேசத்தில் நாம் கருத்தொருமித்துச் செல்ல வேண்டும் (1 கொரி. 1:10), ஆனால் முடிவு செய்ய வேண்டிய விஷயங்களில் நாம் ஒத்துப் போக வேண்டிய கட்டாயம் இல்லை (ரோமர் 14). [5]அந்த ஊழியம் இலகுவானதாயிருக்கப்போவதில்லை (கலாத்தியாவில் கள்ளப் போதகர்களை எதிர்த்து நிற்றலும், அப்பகுதிக்கு அப்பால் தேவன் அவர்களுக்கென்று திட்டமிட்டுள்ள ஊழியத்தை நிறைவேற்றுதலும்), மற்றும் மாற்கு மறுபடியும் திரும்பிச் செல்லும் சாத்தியக்கூறு உண்டென்று பவுல் நினைத்திருக்கக் கூடும். [6]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary*, vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 466. [7]இரண்டாம் பயணத்தின் முடிவில் பவுலுடன் பர்னபா இணைந்திருக்கலாம் (அப். 18), ஆனால் இது நடந்திருக்கக் கூடியதாய்க் காணப்படவில்லை. ஆயினும் பர்னபா கொரிந்து பட்டணத்திலோ அல்லது அதன் அருகிலோ சில காலம் ஊழியம் செய்திருக்க வேண்டும்; இல்லையென்றால், பர்னபா ஊதியம் பெறாதிருந்தது பற்றிய பவுலின் குறிப்பானது கருத்தற்றதாகி விடும். [8]இந்தப் பாடமானது ஒரு வகுப்பறையிலோ அல்லது ஒரு பிரசங்கமாகவோ பயன்படுத்தப்பட்டால், போதிப்பவர் அல்லது வேறொருவர் ஜெபம் செய்த பிறகு, அமைதியான ஜெபத்திற்குச் சற்று நேரம் ஒதுக்கப்படலாம். ஆயினும், நமது பிரச்சனைகளைத் தீர்வு காணாமல், மற்றவர்களை ஒப்புரவாகத் தேடும்படிக்கு வலியுறுத்தக் கூடாது.